# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 66/2025**

**Prosecution Witness : P. W. 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருவேங்கடம் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 06/03/2026

A1 to A3 absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மணலிபுதுநகரில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த வருடம் தேதி நினைவில்லை. ஒரு நாள் மணலிபுதுநகர் சுப்பிரமணிய நகர் அருகே ஒரு பூங்கா பக்கத்தில் ஆந்திரா ஆட்டோ ஒன்று அந்த இடத்திற்கு வந்தது. அந்த ஆட்டோவில் 2 ஆண் நபர்கள் ஒரு பெண் இருந்தார்கள். ஆடு பிடித்ததற்காக போலிசார் அவர்களை அழைத்துச் சென்றார்கள். அந்த இடத்தில் போலிசார் பார்வை மகஜர் தயார் செய்யப்போவதாகவும், அதற்கு சாடசியாக இருக்கும்படி கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையொப்பங்களில் முதல் கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.03.06 18:02:20 +0530

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

கையெழுத்து போட்ட நேரம் என்னவென்றால், பகல் 11.30 இருக்கும். எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன விவரம் இருக்கிறது என்று எனக்கு படித்துக் காண்பித்தார்களா என்றால், இல்லை. நான் சொன்ன நேரத்தில் நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்ற விவரம் நான் கையொப்பமிட்ட தாளில் குறிப்பிட்டிருக்கிறது என்றால், தெரியாது. நான் ஓட்டுநர் என்பதால் போலிசாருக்கு பயந்து கையொப்பம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.03.06 18:02:27 +0530